பக்கங்கள்: ஆறு

NOT FOR SALE

Registered as a Newspaper




# உதயன்

விலை ரூ2/50




கூடர்: 4 சுக்கில ஆடி மீ 21ல சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 2 (05 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 20

# தமிழர் பாதுகாப்பு உறுதியானல் வாரம் 1,500 படைகள் வாபஸ்!

## இந்தியாவின் புதிய யோசனை இது

புதுடில்லி, ஆகஸ்ட் 5

தமிழர் பாதுகாப்பு உறுதியானல் ஒவ்வொரு வாரமும் ஆயிரத்து ஐநூறு துருப்புக்களை விலக்கிக்கொள்ள இந்தியா தயாராக இருக்கிறது.

இவ்வாறு படையினை விலக்கிக்கொள்வது, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் அமைப்பு ஒன்றை உருவாக்கும் யோசனையை இலங்கை அரசு ஏற்பதில் தான் தங்கியிருக்கும்.

— இவ்வாறு இந்திய அரசு புதிய யோசனை ஒன்றைத் தெரிவித்திருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின கூறியிருக்கிறார்.

ஏழு நாட்களாக இலங்கை - இந்திய பிரதிநிதிகளுக்கிடையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுக்கள் நேற்றுடன் முடிவடைந்தன.

பேச்சுவார்த்தை முடிவுற்ற பின்னர், அமைச்சர் விஜேரத்ன, அமைதிப்படை விலகல் தொடர்பாக இந்திய அரசு புதிய யோசனை தெரிவித்திருக்கும் தகவலை வெளியிட்டார்.

இதேவேளை இந்தப் பேச்சுக்கள் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள உதவியதாக இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒளிவு, மறைவு இன்றி நேசமான சூழ் நிலையில் இப்பேச்சுக்கள் நடந்தன. ஆக்கபூர்வ அணுகுமுறைகள் அப்போது தென்பட்டன. பிரச்சினையின் பல அம்சங்களும் பரஸ்பர அக்கறைகளும் நன்கு புரிந்துகொள்ளப்பட்டன.

விவாதத்தின்போது உருவான சில குறிப்பான யோசனைகளை இலங்கைக் குழுவினர் கொழும்பு கொண்டு செல்கின்றனர்.

அவை ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் மேற்கொண்டு எப்படிச் செயல்படுவது என்பது பற்றி தீர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் கண்காட்சி!

சென்னை, ஆகஸ்ட் 5

சென்னை, அண்ணா சாலையில் உள்ள ஆங்கிலப் பத்திரிகை அலுவலகம் ஒன்றின் முன்பதாக இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக சுவரொட்டிகள் மற்றும் அச்சிடப்பட்ட வெளியீடுகளைக் கொண்ட கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது.

இதை நடத்தியவர் ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள போலங்கிரைச் சேர்ந்த டாக்டர் ப்ரியப்பிரதா ரத் என்பவர்.

இலங்கைத் தமிழரில் உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? என்று அவரிடம் கேட்டதற்கு—

"ராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த சுவாமி முக்தானந்த சரஸ்வதியின் சீடர் யான்: அவர் 1983 இலங்கை இனக் கலவரத்தில் இறந்துவிட்டார். குருவின் நினைவாக இலங்கைத் தமிழருக்கு உதவ இந்த இயக்கத்தை நடத்தி வருகின்றேன்" —என்று சொன்னார். (ஒ-எ)

### 4 பேர் காயம்

கொழும்பு மருத்துவமனை ஒன்றின் மீது குண்டு வீசப்பட்டதில் நான்கு பேர் காயமடைந்தனர் என்று இந்திய வானொலி அறிவித்தது. (ஒ-எ)

## வல்வை மக்களுக்கு உடன் உதவுக!

### பொது ஸ்தாபனங்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

'வல்வெட்டித்துறையையும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் சமூகநல அமைப்புகள் உடனடியாக உதவி வழங்க வேண்டும்'

—இவ்வாறு வடமராட்சியைச் சேர்ந்த மூத்த பிரமுகர்கள் பலரும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக வல்வைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து அமுலில் இருக்கும் ஊரடங்கு ஆகியவற்றினால் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் பாதிப்படைந்திருக்கின்றனர்.

அவர்கள் கோயில்களிலும் பொது இடங்களிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்து உணவின்றி கஷ்டப்படுகின்றனர்.

கஷ்டப்படும் இந்த மக்களுக்கு உடன் உதவி வழங்க பொது ஸ்தாபனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் —எனக் கோரப்பட்டுள்ளது. (உ)

## வானம் எங்கணும் ஒரே புகை மண்டலம்

வல்வெட்டித்துறை, ஆக. 5

வல்வெட்டித்துறையில் நேற்றும் தொடர்ந்து பதற்றம் நிலவியது. துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல்கள் விழுந்து வெடிக்கும் சத்தங்களும் கேட்ட வண்ணமே இருந்தன.

வல்வையிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வானத்தில் ஒரே புகை மண்டலம் தென்பட்டது. 'சீ-பிளேன்' விமானமும் அப்பகுதிகளை சுற்றி வட்டமிட்ட வண்ணம் இருந்தது.

வல்வைப் பகுதியில் ஊரடங்கு அமுல் செய்யப்படுவதால் அங்கிருந்து வெளியே வருவதும், வெளியே இருந்து உள்ளே செல்வதும் கஷ்டமாக உள்ளது.

அங்கு உணவுப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் உணவிற்குக் கஷ்டப்படுவதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்-ஜே. ஆர். இடையே இரகசிய உடன்பாடு!

### 1987 நவம்பரில் செய்தனரா?



புதுடில்லி, ஆக. 5

1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பிரதமர் ராஜீவ் காந்தியும் இரகசிய உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டனரா?

புதுடில்லிப் பேச்சுக்களின் போது இந்த இரகசிய உடன்பாடு பற்றிப் பேசப்பட்டதாகவும் தெரியவருகிறது.

பிரச்சினைக்குரிய ஜூலை '87 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைவிட, வேறு ஓர் உடன்படிக்கைபற்றி தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று இலங்கைக் குழுவினர் தெளிவுபடுத்தினர் என்று நம்பப்படுகிறது.

இந்த "இரகசிய உடன்பாடு" கையொப்பமிடப்பட்டபோது இந்திய அரசு அதனைப் பகிரங்கப்படுத்தவில்லை என்றாலும், பின்னர் 1989 ஜூன் 20 இல் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எழுதிய கடிதத்தில், அந்த இரகசிய உடன்பாட்டில் உள்ள விஷயங்கள் பற்றி "சாடைமாடையாக" பிரதமர் காந்தி தெரிவித்திருந்தாராம்.

தமிழருக்கு வழங்கப்படும் அதிகாரப் பரவலாக்கலில் மேலதிகமாக அதிகாரங்களை வழங்க திரு. ஜெயவர்த்தன உறுதியளித்திருந்தார் என்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் பகுதிகளில் தேடுதலும் மோதல்களும்

கிளிநொச்சி, 155 ஆம் கட்டைப் பகுதியில் கடந்த புதன் கிழமை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோதலின்போது 'பரா' வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை உருத்திரபுரம், சிவநகர், எள்ளுக்காடு, முறிப்புக் குளம் பகுதிகளில் புதன் கிழமை இரவு முதல் தேடுதல் இடம்பெற்று வருவதாகவும்—தேடுதலின்போது மோதல்களும் இடம் பெறுவதாகவும் தெரியவருகிறது.

155ஆம் கட்டைப் பகுதியில் இருந்து காட்டுப் பகுதியை நோக்கி ஷெல்கள் ஏவப்படுகின்றன.

இதனிடையில் கரடிப்போக்குச் சந்தியை அண்டிய பகுதிகளில் இரவில் வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-163-76)

## மாவட்ட அபி. சபைகளை கலைக்க அரசு முடிவு

கொழும்பு, ஆகஸ்ட் 5

வளர்ச்சிப் பணிகளை முடித்துக்கொண்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகள் கலைக்கப்படும்.

கலைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் அதிகாரங்கள், கடமைகள் அந்தந்த மாகாண சபைகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

கலைக்கப்பட்ட சபைகளில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்படுவர்.

இதை விரும்பாத ஊழியர்கள் பணிக்கொடை மற்றும் நட்டஈட்டு வசதிகளுடன் ஓய்வுபெற அனுமதிக்கப்படுவர்.

—இப்படி அரசு தீர்மானித்துள்ளது. (உ-எ)

## நடிகை ஸ்ரீதேவி திருமணம் டென்னிஸ் வீரர் அசோக்கை?

நடிகை ஸ்ரீதேவி பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரர் விஜய் அமிர்தராஜின் தம்பி அசோக் அமிர்தராஜை திருமணம் செய்துகொள்ள இருக்கிறார் என்று பம்பாய் ஆங்கில இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திருமணம் பற்றிய ஏற்பாடுகளில் ஸ்ரீதேவியின் தாயார் ஈடுபட்டிருக்கிறார்.

அசோக் அமிர்தராஜும் ஒரு டென்னிஸ் வீரர்.

அமெரிக்காவில் வசித்து வரும் கோடீஸ்வரர் ஆவார்.

ஸ்ரீதேவியும் அசோக் அமிர்தராஜும் இன்னும் நேரில் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசியதில்லை.

—இப்படி பம்பாய் ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது. (உ-எ)

## "ஓ" குறூப் இரத்தம் உடனடியாகத் தேவை!

யாழ்ப்பாணம், ஆக. 5

யாழ்-ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் "ஓ" குறூப் இரத்தம் கையிருப்பு குறைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

எனவே 'ஓ' குறூப் இரத்தம் உள்ளவர்கள் உடனடியாக யாழ்-இரத்த வங்கிக்கு வந்து இரத்ததானம் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ-10)

### சுபநேரம்

ஆடி 21 — சனிக்கிழமை
நக்ஷத்திரம்: உத்தரம்
சுபநேரம்:
03-04 முதல் 04-34 வரை
ராகுகாலம்:
09-04 முதல் 10-34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
சதுர்த்தி விரதம்

## ரஞ்சன் தூதுக்குழு கொழும்பு திரும்பியது

கொழும்பு, ஆக 5

கடந்த ஏழு நாட்களாக இந்தியாவில் பேச்சுவார்த்தை நடத்திய அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தலைமையிலான தூதுக்குழு நேற்றிரவு கொழும்பு திரும்பியது.

நேற்று மாலை புதுடில்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் திரு. விஜேரத்தின இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ் அளித்த பகல் விருந்தின் போது கடைசிப் பேச்சுக்களை நடத்தினார்.

பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்காக காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை.

இதுவரை நடந்த பேச்சுக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை யுத்தநிறுத்தம் செய்து மையங்களில் நிலை பெறவேண்டும்

### ஈழவர் ஜனநாயக முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 5

இந்திய அமைதிப் படையினர் கட்டம் கட்டமாக வெளியேறுதற்கான கால அட்டவணை தயாரிப்பதற்கு முதற்படியாக யுத்த நிறுத்தம் ஒன்றினை அறிவித்து இந்தியப் படையினர் கேந்திர மையங்களில் நிலை கொள்ள வேண்டும்.

இதன் மூலமே ஆயுதக் களைவு என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டுள்ள யுத்த சூழ்நிலை களையப்பட முடியும்.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச்செயலாளர் திரு. வே. பாலகுமாரன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

அண்மைக் காலமாக இலங்கை, இந்திய அரசுகளின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளும் ஸ்ரீலங்கா இராணுவம் பற்றிய செய்திகளும் தமிழ் பேசும் மக்களுடைய மனநிலையைப் பெரிதும் பாதித்து வந்தன. தற்பொழுது இரண்டு அரசுகளுக்கும் இடையிலான முறுகல்

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




உப்பிடி அடிக்கடி வெறிச்சோடிற கட்டம் வந்தால் நாடு என்னுகப் போகுது......?

## ஜே.வி.பி.யின் ஊரடங்கினல் கொழும்பு வெறிச்சோடியது!

கொழும்பு, ஆக. 5

ஜே. வி. பி யினரின் ஊரடங்கு உத்தரவை அடுத்து கொழும்பு நேற்று வெறிச்சோடியது.

கடைகள், அரசு அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் தொழிற்சாலைகள் மூடிக்கிடந்தன.

வீதிகளில் ஆள் மற்றும் வாகன நடமாட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது. ரயில் சேவைகள் ரத்துச்செய்யப்பட்டன.

கடந்த 28-ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசின் ஊரடங்குச் சட்டத்தை மீறி, இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் சுட்டதில் பலர் உயிரிழந்தனர் அல்லவா?

அதை நினைவு கூருமுகமாக நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கும்படி ஜே. வி. பி.பொது மக்களைக் கேட்டிருந்தது.

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம்

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஓர் ஆண் நாய்க்குட்டி (Alsation) அல்ஷேசன் (02 மாதம்) விற்பனைக்கு உண்டு. 6, அம்பலவாணர் வீதி, ...த்தியடி, யாழ்ப்பாணம். (1351)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சைக்குரிய புதிய தமிழ்மொழிப் பயிற்சி ஆண்டு 5, புதிய கணிதப் பயிற்சி ஆண்டு 05 வெளிவந்து விட்டது. திறமைச் சித்திக்கு ... வழிகாட்டி. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: ... வி. அச்சகம், யாழ்ப்பாணம். (1352)

சுன்னாகத்தில் காங்கேசன் துறை வீதியில் சந்தியிலிருந்து ...ால் மைல் தூரத்தினுள் ...ந்தறைகளைக் கொண்ட ...டும், ஒன்பதரைப் (9 1/2) பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 82/3, நல்லூர் ...றுக்குவீதி, யாழ்ப்பாணம். (11690)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (09-08-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா .../50) உடன் பதியவும். இல: 09, கந்தையா லேன், ...ன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு: இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1349)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா... ன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052)

## தேவை

யாழ்நகரில் பொருட்கள் கொண்டு சென்று விற்பனை செய்வதற்குச் சொந்தச் சைக்கிள் உடைய பெண்கள் தேவை. பிணைப்பணம் 1000/- கட்டுதல் வேண்டும். புகைப் படத்துடன் விண்ணப்பிக்கவும். தேவைப்படின் இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 570, C/o உதயன் (1350)

கேத் திறில் கம்மாலை வேலையில் அனுபவம் உள்ள வெல்டர் தேவை. காஸ் வெல்டிங் தெரிந்தவர் விரும்பத்தக்கது. வதனு வெல்டிங் வேக்ஸ் 316, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (1357)

## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீட்டுடன் அல்லது வெறும் காணி வாடகைக்கு அல்லது வாங்குவதற்குதேவை தொடர்பு: யாழ் சைனீஸ் றெஸ்ற்ரோரன்ஸ்(P.V.T.Ltd) முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (1359)

## பூசகர் தேவை

காலை மாலை இருகாலப் பூசைக்கு ஒழுக்கமும், பயபக்தியும் நிறைந்த பிராமணக் குடும்பஸ்தர் உடனடியாகத் தேவை. வீடு கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். தருமகர்த்தா, ஸ்ரீநாகபூஷணியம்மை தேவஸ்தானம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (1354)

## பௌதிகவியல்

அனுபவமுள்ள பல்கலைக்கழக மாணவரால் பௌதிகவியல் யாழ். மாநகர எல்லைக்குள் வீடுகளில் வந்து சிறு குழுக்களாகவோ தனியாகவோ கற்பிக்கப்படும். விபரங்களுக்கு இல: 572, C/o உதயன், யழ்ப்பாணம். (1356)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5ற்கான புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை (ஆறுவது) 06-08 89 ஞாயிறு பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும். முன்கூட்டியே பதிவு செய்யவும். நடந்து முடிந்த பரீட்சை வினாத்தாள்களை விரும்புவோர் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் செங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (11694)

## வர்த்தகம்

A/L 90, 91 ஆரம்பம் ஆசிரியர் இ இரட்ணம் ஆரம்பம் சனிக்கிழமை 2 மணி: இடம் 221/11 கோவில் வீதி, நல்லூர். (1353)

## வகுப்புக்கள்

A/L 89, 90, 91 வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன: மேலதிக விபரத்திற்கு நிர்வாகியைச் சந்திக்கவும். மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி கிழ., பருத்தித்துறை. (1344)

## பெற்றுக்கொள்ளவும்

உங்கள் மணிக்கூடுகளை ஒரு கிழமைக்குள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும் K.R.K வாச் வேக் 18 ஏ, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1358)

---

# A/L 89, 90, 91

[விஞ்ஞானம், வர்த்தகம், கலைப் பிரிவுகள்]

**O/L, Typing, Short Hand**

ஆரம்பம்:- 05-08-89

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1445)

---

உ

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் தப்பு வல்லிபுரம்

(பருத்தித்துறை இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளர்)

தோற்றம்: 21-04-1936 | மறைவு: 17-07-1988

திதி: 05-08-1989

தன்னலமற்ற தியாகம் உற்பவித்த வீணைநிலமே!
இம்மியளவும் சுயநலமில்லாத நேசத்தை என்றும் சொரிந்தவனே!
என்றும் போல இன்றும் உன்னை நினைவு கூருகிறோம்.
உங்களுக்கு சாந்தியை வேண்டுகிறோம்:

அமரர் ஆ. கணேசு சார்பில்
நண்பர்கள்: V. பாலேந்திரா, M. சிவானந்தம், க. பாலசுப்பிரமணியம்.

(1402)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திரு. பூதத்தம்பி பரராஜசிங்கம்

[Retired Teacher: Christian College Atchuvely, Driberg College Chavakachcheri, St. Joseph's College Trincomalee, Majeediya School Maldives]

தோற்றம்: 03-11-1934 | மறைவு: 04-07-1989

"நீர் உமது விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக் கொண்ட உமது அடியாருக்குச் சகாயம் செய்யும்"

எமது குடும்பத் தலைவரின் துயரில் பங்கு கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், மலர் வளையம் வைத்தோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Station Lane,
Chavakachcheri.

[சி 2949]

---

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## அமரர் த. விமலேஸ்வரன் அவர்கள்

தோற்றம்: 25-09-1963 | மறைவு: 18-07-1989

எமது அன்புத் தெய்வமே!
நீர் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உமது நினைவு எமது நெஞ்சில்
ஓராண்டுக் குழந்தையாக வளருதையா!
பாகுபாடு ஏன் என்றீர்
பகைவனென்றால் யாரென்றீர்
உயர்வு தாழ்வு வேண்டாமென நீர் உழைத்தீர்!
அன்புக்கு விளக்கம் சொன்னீர்
பண்புக்கு விளக்கமானீர் – இன்று
எட்டாத தூரத்தில் நீர் சென்றாலும் உமது எண்ணம்
எட்டாமல் போகாதையா!
உமது நினைவு நிலைக்குமையா!

அமரர் அவர்களின் சிரார்த்த தினம் 06-08-1989 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

நண்பர்கள், உறவினர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உமது நினைவில் வாழும்
— குடும்பத்தினர்

பூநகரி,
தம்பிராய்.

[1444]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் ஆராதனை அழைப்பும்

மண் பிரவேசம்: 08 | 09 | 1925



விண் பிரவேசம்: 05 | 07 | 1989

## திரு. முத்து சின்னத்தம்பி அவர்கள்

ஏழ்மையில் எம்மை உருவாக்கி, அன்பு பாராட்டி ஏட்டுக் கல்விப் பயிரை விதைத்து, அது தழைத்து கனி தருமுன் எம்மைவிட்டு விண்ணேகிவிட்ட தந்தையே! காண்பதெப்போ என எண்ணி எம்முள்ளம் உருகுதையா!

05-08-89 மாலை 3.30 மணிக்கு பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கல்வாரி தேவாலயத்தில் நடைபெறும் நன்றி நவிலல் ஆராதனையில் வந்து கலந்து கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், நண்பர்கள், சபைமக்கள்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (11752)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. இந்துநாகரிகப் பேராசிரியர்
2. சமஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
3. தமிழ் உதவி விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
4. அரசறிவியல் உதவி விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
5. பொருளியல் உதவி விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 கணிதம் / புள்ளிவிபரவியல் சிறப்புத் தேர்ச்சியுடன்.
6. பொருளியல் உதவி விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
7. உதவி விரிவுரையாளர் – நுண்கலைகள் (நுண்கலைகள் / அழகுக் கலைகள் வரலாற்றில் சிறப்புத் தேர்ச்சி)
8. போதனாசிரியர் - பரத நாட்டியம்
9. வர்த்தகமும் முகாமைப்படிப்புகளிலும் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1

சம்பள அளவுத் திட்டம்:

1. பேராசிரியர் தரம் 11: ரூபா 12,200 - 6x300 -14,000/- மாதமொன்றிற்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11: ரூபா 8,000-5x250 - 9250/- மாதமொன்றிற்கு
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1: ரூபா 9,600 - 8x250- 11,600/- மாதமொன்றிற்கு
4. உதவி விரிவுரையாளர்: ரூபா 3900/- (நிலையானது) ஓராண்டுக்கு மாதமொன்றிற்கு
5. போதனாசிரியர் தரம் 111: ரூபா 3,000 - 6x80- 3480/-மாதமொன்றிற்கு

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதிகள் பின்வருமாறு:

பேராசிரியர் பதவி: 1989-09-29

உதவி விரிவுரையாளர் பதவி, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1: 1989-08-31

இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்க செய்யப்படல் வேண்டும். பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1.50 முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சமீ அளவினையுடைய தபால் உறையும் ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x10 சமீ அளவுடைய தபால் உறையும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரின் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படலாம்.

குறிப்பு:

இந்துநாகரிகப் பேராசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமன முறை கவனிக்கப்படும்.

— பதில் பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
03-08-89. [சி-3164]

---

விண்ணுலக வாழ்வின்

# முதல் வருட நினைவு



## அமரர் வீரகத்தி சிவராசா அவர்கள்

(சங்கானை பட்டினசபை முன்னாள் உபதலைவர், பிரபல வர்த்தகர்)

தோற்றம்: 1924-10-02 | மறைவு: 1988-08-16

திதி: 05-08-1989


ஆண்டொன்று மறைந்திடினும் எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் எண்ணம் தோன்றாத நாளில்லை. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (1435)

---


# புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

®பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

எச்சமென்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படா அ தவன்

**பொருள்:**

பிறர்க்கு உதவியாக வாழாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்தபிறகு எஞ்சி நிற்பது என்று எதனை எண்ணுவானோ!

உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
05 08 1989  த. பெ: இல. 23

## வீதிக்கொலைகள் குறையாவா?

குடாநாட்டில் வாகன விபத்துக்களால் உயிரிழப்போர் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரித்துவருவதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. பொலிஸார் ஆகப் பிந்தி வெளியிட்ட புள்ளிவிவரங்களின் பிரகாரம், வாகனங்களால் மோதுண்டு இறப்பவர்கள் ஒருபுறமிருக்க, அவற்றில் இருந்து விழுந்து மரணமாவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

சட்டம் ஒழுங்கை உதாசீனம் செய்து, தட்டிக் கேட்க எவரும் இல்லை, தண்டிக்க யாரால் முடியும் என்ற நிலையில், தாம் செய்வது தமக்கே, தமது மக்களுக்கே கேடுவிளைவிக்கிறது என்ற உணர்வு சிறிதும்கூட இல்லாமல், வாகனம் செலுத்துவோரும், வாகனநடத்துனர்களும், பயணிகளும், பாதசாரிகளும் என்று எல்லாத் தரப்பினருமே குற்றம் புரிகிறார்கள். வீதிக்கொலைகளுக்கு காரணர்களாக விளங்குகிறார்கள்!

வாகனம் செலுத்துபவர்களுக்கு அவற்றை வேகமாகச் செலுத்தி நேரத்தை மிச்சம் பிடிக்கவேண்டும் என்ற அவசரம், அதனால் போக்குவரத்து விதிகளை அனுசரிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. வீதி ஒழுங்கை பேணுதல் அவசியம் என்ற உணர்வு இல்லை. தெருவால் செல்லும் ஏனைய வாகனங்களைப்பற்றியோ அல்லது பாதசாரிகளைப் பற்றியோ அக்கறை இல்லை. அடுத்தவருக்கு உயிராபத்து விளைவிப்பதைப் பெரும் பொருட்டாக, குற்றமாக, பாவமாக உணரும் மனக்கிலேசமும் இல்லை.

இவ்வாறு வாகனம் செலுத்துவோரில், இப்போது சாரதிகளாக உள்ளவர்களில் பலரிடம், உரியமுறைப்படி பெற்ற லைசென்ஸ் இல்லை. சாரதி ஆசனத்தில் ஏறிக்குந்திவிட்டால் அதனைச் செலுத்தக்கூடிய முழுத் தகுதியும், திறமையும் தமக்கு வந்துவிட்டதாக ஒவ்வொருவரும் நினைத்துவிடுகிறார்கள்.

'கிளட்சை' அழுத்துவதற்குப் பதிலாக 'அக்ஸிலறேற்றரை' அழுத்தித் திடீரென மோதுவோரும் தமக்குக் கார் ஓட்டத்தெரியும் என்று சொல்வார்கள்! செலுத்தவும் செய்கிறார்கள்!! ஒரு காலத்தில் சைக்கிள்கள் ஏராளமாக இருந்த இடத்தை, இப்போது ஸி-90, ஸி.70, ஸி-50, சுசுக்கி, யமகா என்ற மோட்டார் சைக்கிள்கள் பிடித்துவிட்டன. வயதெல்லை இல்லாமல் சிறுவர்கள் கூட இவற்றைச் செலுத்துகிறார்கள். வேகக் கட்டுப்பாடு, வீதி ஒழுங்கு என்று எந்த ஒழுங்கும் இல்லாமல் இவை ஏராளமாக ஓடுகின்றன. சைக்கிளோட்டிகளையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

வாகனத்தில் ஏறியவன் எல்லாம் சாரதி என்ற நிலையில், பயிற்சியும், தகுதியும் இல்லாதவர்கள் மலிந்துவிட்டதே வீதி விபத்துக்களும், அவற்றால் ஏற்படும் மரணங்களுக்கும் முதற்காரணம் ஆகும்.

வாகனங்களில் அதிக எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றி வருமானம் தேட நினைக்கும் வாகன நடத்துனர்களுக்கு, வீதி விபத்து மரணங்களில் இரண்டாவது பங்குண்டு. வாகனத்தின் வாசல் நிறைந்து வழிந்த பின்னரும், இடமிருப்பதாக அழைத்துப் பயணிகளை வாகனங்களில் அவர்கள் ஏற்றுவதை நாளாந்தம் காண்கிறோம். அதனால் வாகனம் விபத்துக்குள்ளாகும் ஆபத்து மட்டுமன்றி, பயணிகள் கீழே விழுந்து இறக்கும் ஆபத்தும் உண்டு என்பதை நடத்துனர்கள் புரிந்து கொள்வதில்லை.

இரண்டுபேர்களேபயணம் செய்யக்கூடிய மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவற்றில் குடும்பம் முழுவதுமே பயணம் செய்து, வாகனத்தைக் கட்டுப்படுத்தி ஓட்டமுடியாமல் விபத்துக்குள்ளாகும் சம்பவங்களும் 'ஓவர் லோடி'ங்குக்கு நல்ல உதாரணம்.

தமக்கு அவசரம் என்று கருதியும், வேண்டிய இடத்துக்கு நேரத்துக்குப் போய்விட வேண்டும் என்று நினைத்தும், வாகனத்தில் தொங்கிக் கொண்டு பயணம் செய்யும் பயணிகளும் வீதிவிபத்து மரணங்களுக்கு மூன்றாவது காரணஸ்தர்கள் ஆகின்றனர். பயணிகள் பக்கத்தில் இதனைத் தவிர்த்துக் கொண்டால் வாகனத்திலிருந்து விழுந்து இறப்பவர் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.

வீதிகளில் வாகனப் போக்குவரத்து என்ற ஒன்றுஉண்டு என்ற உணர்வே இல்லாதவர்களாக, வீதிகளின் நடுவேயும், குறுக்கேயும் நடக்கும் பாதசாரிகளும், வீதிகளைத் திடீரெனக் கடக்கும் பாதசாரிகளும் வீதி மரணங்களுக்கு நான்காவது காரணர்கள் ஆவர்.

நான்கு வகையினரும் தாம் செய்யும் கெடுதலை உணராது, சட்டம் ஒழுங்கை தமது கையில் எடுத்துக்கொண்டு, 'நம்மைக் கேட்பதற்கு யார்?' என்ற போக்கில் நடக்கும் வரை வீதி மரணங்கள் அதிகரிக்கவே செய்யும். அவச் சாவுகள் தொடரவே செய்யும். வீதிக் கொலைகள் தடுப்பாரின்றி உயர்ந்தே செல்லும்.

## 31 ஆம் திகதிக்குள் வாபஸ் நிலை வலியுறுத்து

புதுடில்லி, ஆக. 4

இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் அமைதிப்படையினர் அனைவரும் திரும்பப் பெறப்பட வேண்டும் என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டையே அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின புதுடில்லிப் பேச்சுக்களின்போது வலியுறுத்தி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## இரனேட் வீச்சு

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 5

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் சித்தங்கேணிப் பகுதியில் படையினர் மீது இரனேட் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த பலர்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (அ-9)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 5

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்து அமைதிப்படை வாகனமும் சைக்கிள் ஒன்றும்விபத்துக்குள்ளாகின. சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார்.

நேற்று முன் தினம் மாலை 5மணியளவில் யாழ்.வேம்படி - ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கு அண்மையில், காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக இந்த விபத்து நடந்தது.

விபத்துக்குள்ளானவர் உடனடியாக யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

(அ-9)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 5

நல்லூர் திரிசாரணர் குழுவின் நல்லூர் உற்சவம் சம்பந்தமான கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சகல திரிசாரணர்களையும், புதிய அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த)

### ● 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்:

# பரீட்சைக்கு தெரிவாவோர் விவரம் கோட்டக் கல்வி அலுவலகங்களில்

### அடுத்த வாரமளவில் பார்வைக்கு வைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக 5

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிகளுக்குப் போட்டிப் பரீட்சைக்குத் தெரிவானவர்கள் விவரங்கள் அடுத்தவார இறுதியில் கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படவிருக்கின்றன.

யாழ் - மாவட்டத்தில் இருந்து இப்பதவிகளுக்கு தினமும் ஏராளமானவர்கள் விண்ணப்பங்களை யாழ். கல்வித் திணைக்களத்தில் கையளித்து வருகிறார்கள்.

இதுவரை கிடைத்த விண்ணப்பங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாகப் பிரிக்கப்பட்டு வருகின்றன. 20 ஆசிரியர்கள் கொண்ட குழு நேற்று இவ்வேலைகளை ஆரம்பித்தது. கிடைத்த விண்ணப்பங்களில் புள்ளிகள் சரியாகக் கொடுக்கப்பட்டுள்ளனவா, விவரங்கள் சரியாகத்தரப்பட்டுள்ளனவா என்பன குறித்து இக்குழு பரிசிலனை செய்து வருகிறது.

இப்பதவிகளுக்கான போட்டி, நேர்முகப் பரீட்சைகள் சம்பந்தமான விவரங்கள் வருமாறு.

★ கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் பிரிக்கப்படும். பின்னர் கூடிய புள்ளி அடிப்படையில் வகைப்படுத்தப்படும். அந்தப் பிரிவில் உள்ள வெற்றிடத் தொகையில் மூன்று மடங்கினர் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். குறிப்பாக அப்பிரிவில் ஒரு சங்கீத ஆசிரியர் வெற்றிடமாக இருந்தால் சங்கீத தராதரம் பெற்ற மூவர் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

★ போட்டிப் பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இப்போட்டிப் பரீட்சைகள் தெரிவு செய்யப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறும். பரீட்சை 45 நிமிடம் நடைபெறும்.

★ இப்போட்டிப் பரீட்சையில தோற்றத் தகுதியானவர்கள் விவரங்கள் அந்த அந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கோட்டக்கல்வி அலுவலகங்களில் இம்மாதம் 12 ஆம் திகதியளவில் வைக்கப்படும். விண்ணப்பம் அனுப்பியவர்கள் அந்த அந்தக் கோட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, விவரத்தைப் பெறலாம். தகுதியானவர்களுக்குப் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும. அத்துடன் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டிய பாடசாலை விபரமும் தெரிவிக்கப்படும்.

★ வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்படும்.

★ போட்டிப் பரீட்சையை அடுத்துக் குறிப்பிட்ட இடங்களில் இம்மாதம் 15, 17, 18, 19, 20 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

★ இந் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு செப்டம்பர் முதலாம் திகதி முதல் சேவைக் கால முன் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி அளிக்க 10 நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

(த - 3)

## எசல பெரஹரா ஆரம்பம் வெளி வீதி வலம் இல்லை

கண்டி, ஆகஸ்ட், 5

பிரசித்தி வாய்ந்த கண்டி எசல பெரஹரா புதன்கிழமை கண்டி தலதாமாளிகையில் ஆரம்பமானது. நாட்டின் சீரற்ற சூழ்நிலை காரணமாகக் கும்பல், ரந்தோலி ஆகிய பெரஹராக்கள் இம்முறை வெளிவீதி வலம் வரமாட்டா என பெரஹராக் கமிட்டி அறிவித்துள்ளது.

நாத, விஷ்ணு, கந்தன், பத்தினி ஆகிய கடவுள்களுக்கு நடைபெற்ற கிரியைகளுடன் ஆரம்பமான இப்பெரஹரா இம்முறை கோவில் வளாகத்தினுள்ளேயே நடைபெறுகின்றது.

17ஆம் திகதி நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும் இப்பெரஹராவைக் காண உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பெருந்திரளான சுற்றுலாப் பயணிகள் வருவது வழக்கம்.

(இ-6)

### முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் கூறுகிறார்:

# ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அமைதிபடையை விலக்கவேண்டும்

### இல்லையேல் போராட்டம் வலுக்குமாம்!

புதுடில்லி, ஆக. 4

அமைதிப்படை விலக்கம் பற்றிய விஷயத்தை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்மானிக்கவேண்டும். இல்லாவிட்டால் எல்லாத் தீவிரவாதக் குழுக்களும் போராட்டம் நடத்த இது ஒரு வாய்ப்பை அளித்துவிடும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்திய வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

சொந்தச் செலவில் அமைதிப்படையை அனுப்பியதன் மூலம் இலங்கை அரசுக்கு இந்தியா ஆதரவளித்து உள்ளது. அப்படி நடக்கவில்லை என்றால் இலங்கை இதற்குள்ளாகவே பிளவுபட்டிருக்கும்.

இலங்கை மக்களுக்கு உதவ பிரதமர் காந்தி முழுமனதுடன் முன்வந்தார். திரு. காந்தி உதவிக்கு வராமலிருந்திருந்தால் இலங்கையின் ஒற்றுமையும் உறுதிப்பாடும் சீர்குலைந்து இருக்கும்.

தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி இலங்கையை பிளவுபடாமல் பார்த்துக்கொண்ட திரு. காந்திக்கு இலங்கை மக்கள் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

ஆறு தீவிரவாதக் குழுக்கள் தீவிரமாகச் செயற்பட்ட நிலையில் இந்தியா உதவிக்கு வந்தது.

தீவிரவாதிகளின் கை ஓங்கியிருக்குமானால் இலங்கை அரசு அவர்களுக்கு அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

இந்தக் கட்டத்தில்தான் இந்த உடன்படிக்கை பற்றி பரிசீலிக்கப்பட்டது.

—இப்படி திரு. ஜெயவர்த்தன பேட்டியில் தெரிவித்தார். (உ-எ)

## அமைதிப்படை விலகல்; நோர்வேயில் ஆர்ப்பாட்டம்

நோர்வேயில் கடந்த வெள்ளிக்கிழமை - இலங்கைத்தமிழரும் சிங்களவருமாக சுமார் 400பேர் - இந்தியத் தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இலங்கையில் இருந்து அமைதிப்படை வெளியேற வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் உற்சவம் சிறப்புற உதவுங்கள்

### யாழ். மாநகரசபை ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஆக. 5

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலங்களில் உற்சவத்தை சிறப்புற, அமைதியாக நடத்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லூர் உற்சவத்தையொட்டி அவர் மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளிலேயே இப்படிக் கேட்டுள்ளார்.

அவ்வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பக்தர்கள் கூடுமானவரை நகைகள் அணிவதை தவிர்க்க வேண்டும்.

இம்முறையும் பொலீஸார் கடமையில் ஈடுபடமாட்டார்கள். ஐந்து தடைமுகாம்களிலும் தொண்டர்களே சேவையில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

மாநகராட்சி மன்றம் ஏற்படுத்தியுள்ள தற்காலிக, நிரந்தரக் கடைகளைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் தற்காலிக அமைப்புக்களையும், வர்த்தக நிலையங்களையும் ஸ்தாபிக்கக் கூடாது.

உத்தரவு பெற்ற வியாபாரநிலையங்கள் என்ன வியாபாரத்துக்காக உத்தரவுப் பத்திரம் பெற்றார்களோ அந்த வியாபாரம் மட்டுமே உற்சவகாலத்தில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

கோயில் வீதியிலும், தடைப் பகுதிக்குள்ளும் திரிந்து வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

விற்பனைப் பொருள்களை கண்காட்சிக்காக நடைபாதையிலோ, விருந்தைகளிலோ வைக்கமுடியாது.

★ கூடுமானவரை ஆலயத்துக்குள்ளேயும், வெளியேயும் சனநெருக்கடியைத் தவிர்க்க வேண்டும்.

★ [illegible] வேண்டும்.

★ ஐஸ்கிறீம் வியாபாரம் இம்முறை தற்காலிக சந்தையில் மட்டுமே நடைபெறும்.

(த- 3)

### 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்:

## மாவட்ட பணிப்பாளருக்கே விண்ணப்பம் அனுப்ப வேண்டும்

### பிரதிக் கல்விப்பணிப்பாளர் மீண்டும் வலியுறுத்து

யாழ்ப்பாணம, ஆக. 5

25ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கே அனுப்பப்பட வேண்டும்.

இவ்விடயத்தை யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி நேற்று மீண்டும் வலியுறுத்தம் செய்தார்.

இப்பதவி சம்பந்தமான வர்த்தமானி அறிவிப்பு யாழ். மாவட்டத்துக்கு வந்து சேர்ந்ததை அடுத்து விண்ணப்பதாரிகள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

வர்த்தமானியில் மாகாண கல்விப் பணிப்பாளருக்கே விண்ணப்பம் அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கல்வி அமைச்சு, விண்ணப்பங்களை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கே அனுப்ப வேண்டும் என்ற திருத்தத்தைப் பின்னர் வானொலி, பத்திரிகைகள் மூலமாக அறிவித்திருந்தது.

(த- 3)

## மறுவாழ்வு திட்ட உதவிகள்

சாவகச்சேரி, ஆக. 5

அறவழிப் போராட்டக் குழுவினரின் மறுவாழ்வுத் திட்ட உதவிகள் வழங்கும் வைபவம் அறவழிப் பணிமனையில் நாளை 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இவ்வைபவத்தில் சாவகச்சேரி நீதிவான் திரு. க. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த- 31)

## வாசகர் திருமுகம்

### உயர்தரப்பரீட்சையும் அடையாள அட்டையும்

1989 உயர்தரப் பரீட்சை ஆக. 19 இல் நடைபெறுவதாக முன்பு பரீட்சைத் திணைக்களத்தால் நிச்சயிக்கப்பட்டு இருந்தது. குறிப்பிட்ட திகதியில் பரீட்சை நடைபெறும் என்பது மாணவர்களின் மனதுக்குக் கஷ்டமான விஷயம்.

ஆயினும் 'கல்வியே கண்' என மதித்து வரும் வடபகுதி மாணவர்கள் இக் கஷ்டமான காலகட்டத்திலும் தமது கல்வியை வீட்டிலேயே விடா முயற்சியுடன் தொடர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு படித்துவரும் தனியார் கல்லூரி மாணவர்கள் மத்தியிலே ஓர் பூதாகாரமான பிரச்சினை உருவெடுத்துள்ளது. தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்களும், பறிகொடுத்தவர்களும், அழிந்துபோக விட்டவர்களுமாக பல இளைஞர்-யுவதிகள் பரீட்சைக்கு எப்படி சமூகமளிப்பது என்பது தெரியாமல் குழம்பி உள்ளனர்.

பாடசாலைகள் மூலம் வழங்கப்பட்டு வந்த தற்காலிக அடையாள அட்டைகள் பலருக்கு காலாவதியாகி விட்டன. இந்தத் தற்காலிக அடையாள அட்டையுடன் தற்போது நாட்டின் எப்பகுதிக்கும் செல்ல முடியாமையினாலும், பலர் அவற்றை உதாசீனம் செய்துள்ளனர்.

இப்போது நடைமுறையில் இருக்கும் அடையாள அட்டையில் கிராம சேவகர், இந்திய இராணுவ அதிகாரிகளின் கையொப்பம் மட்டும் உள்ளதால் இவற்றின் உதவியுடன் தனியார் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியுமா?

அ. செல்வக்குமார்
அச்சுவேலி.

### இல: 769 பஸ்

கீரிமலை - யாழ்ப்பாணம் 769 வழி இலக்க பஸ் காலை 7 மணிக்கு முன்னர் சேவையில் ஈடுபடாததால் யாழ்ப்பாண நகருக்கு வெளியே கடமையாற்றும் ஊழியர்களும் மாணவர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

காலை 8 மணிக்குப் பின்னரே பஸ் சேவையில் ஈடுபடுவதால் அவர்கள் உரிய நேரத்தில் கடமைகளுக்குச் செல்ல முடியவில்லை.

இதனைக் கவனத்தில் எடுத்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி இ. போ. ச. நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

வி. பிரபு
கீரிமலை.

## சமய நிகழ்ச்சிகளில்

### நல்லூர் ஆலயக் கொடிச்சீலை

யாழ்ப்பாணம், ஆக. 5

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில வருடாந்த உற்சவத்தை முன்விட்டு செங்குந்த மரபு மக்களால் வழங்கப்பட்டு வரும் கொடிச்சீலை இன்று (சனிக்கிழமை) காலை சட்டநாதர் வீதியில் உள்ள வேல்முருகன் ஆலயத்தில் இருந்து அழகிய சித்திரத் தேரில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, ஒப்படைக்கப்படும். (இ எ)

### விண்ணேற்பு விழா

யாழ்ப்பாணம், ஆக. 5

நாவாந்துறை புனித மரியாள் ஆலய விண்ணேற்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுத்திருப்பலியும் மாலை 6 மணிக்கு செபமாலை தேவதாயின் பிரார்த்தனை திருச்சொரூப தேர்ப்பவனியும் இடம் பெறும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபத்தான நிலையில்...

வல்வெட்டித்துறை, ஆக. 5

வல்வெட்டித்துறையில் புத ...ன்று நடந்த அசம்பாவிதங் ...ளின் போது காயமடைந்து ...பத்தான நிலையில் இருந்த ...ர்களில் ஒன்பது பேர் பலத்த ...ரமங்களின் மத்தியில் மந் ...கை ஆஸ்பத்திரியில் சேர்க் ...ப்பட்டனர்:

அப்புலன்ஸ் மூலம் மந்தி ...கைக்கு கொண்டு வந்து ஆஸ் ...த்திரியில் அனுமதிக்கப்பட் ...ள்ளோர் விவரம் வருமாறு:- எஸ். அருணேந்திரன் (15 ...யது) ஈ. யோககுரு (34வயது) ...ஸ். அருட்சோதி (34 வயது) ...ஸ் இராஜேந்திரா (25வயது) ...தய்வசிகாமணி வரலட்சுமி (18 வயது) கே. சருணனந்த ...ாஜா (35 வயது) எஸ் மங் ...யர்க்கரசி (70வயது) ஜெய ...காபால் இந்துமதி (22வயது) ...ஸ், கிருஷ்ணமூர்த்தி 17வயது

## கல்வயலில் விழுந்த ஷெல்

செவ்வாய் இரவு சாவகச் ...சேரியில் இருந்து ஏவப்பட்ட ...தாகக் கூறப்படும் ஷெல்களில் ...ஒன்று கல்வயலில் விழுந்தது. இதனால் 70 வயது வயோ ...திபர் ஒருவர் படுகாயத்துக் ...குள்ளானார். அவரின் மகனும் ...காயமடைந்தார். (ஓ-31)

## கடதாசி இறக்குமதி

கொழும்பு, ஆக 5

பாடசாலைகளுக்கான பாடப்புத்தகதட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு தேவைப்படும் அளவு புத்தகங்களை அச்சிட்டு வெளியிட கடதாசி இறக்குமதியாகும்.

கடதாசியை இறக்குமதி செய்ய அரச அச்சகக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. (ஓ-எ)

## ஜப்பானில்பயிற்சி

கொழும்பு, ஆக 5

கண்ணாடிநார் படகுகளை அமைக்கும் தொழில் நுட்பத்தில் 30 இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் உயர் பயிற்சி அளிக்கப்படும்.

இந்தத்துறையில் 30 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த யமாஹாமோட்டார் கம்பனியின் ஆதரவில் இந்தப் பயிற்சித் திட்டம் மேற்கொள்ளப்படும்.

தேசிய தொழில் பயிற்சிச் சபையினால் தெரிவு செய்யப்படும் இளைஞர்களே இந்த 6 மாதகால பயிற்சிக்காக அனுப்பப்படுவார்கள். (த)

## மொத்த விற்பனை நிலையம்

கல்முனை, ஆக 5

கல்முனை நகரத்தில் கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்தின் கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இதன்மூலம் மக்கள் தமக்கு வேண்டிய பொருள்களை கொள்வனவு, விற்பனவு செய்வதில் இருந்த கஷ்டங்கள் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவே கல்முனைப் பகுதியில் முதன் முதலாக நிறுவப்பட்ட கூ. மொ. வி. நிலையமாகும். (த-ரி)

## ஆரோக்கியமான குழந்தை போட்டி

யாழ்ப்பாணம், ஆக 5

நவாலி ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் நடத்திய 6 மாதத்துக்கும் 1 வயதுக்கும் இடைப்பட்ட ஆரோக்கியமான குழந்தைப் போட்டியில் பரிசு பெற்றோர் வருமாறு:

முதலாமிடம்: நிஷாந்தினி நித்தியானந்தம், இரண்டாமிடம்: தர்மிலா விக்னேஸ்வரன், மூன்றாமிடம்: ஜெயகாந் அரசநாயகம்.

அங்கு நடைபெற்ற தாய்மாருக்கும் யுவதிகளுக்குமான சுகநல அறிவு வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்:

திருமதி பரமசவுந்தரி ஜெயரஞ்சித், செல்வி பத்மலோசனி மார்க்கண்டு, திருமதி சரோஜினிதேவி கிருஷ்ணராஜா, திருமதி லிங்கேஸ்வரி அரசநாயகம், திருமதி சரோஜினிதேவி உருத்திரகுமார், திருமதி கனகாம்பிகை நித்தியானந்தம், திருமதி புவனேஸ்வரி தேவராசா, செல்வி ஜெயமலர் அப்பாத்துரை. (த)


## பிரயாண ஏற்பாடுகள்

● ஜேர்மனி

(16 வயதிற்கு மேற்பட்டோரும் கீழ்ப்பட்டோரும்)

பிரயாண ஏற்பாடுகள் விரைவாக செய்து கொடுக்கப்படும்.

சவூதி அரேபியா, ஓமான், குவைத், அபுதாபி, பாஃரின் ஆகிய நாடுகளுக்கு ஆண், பெண் இருபாலருக்கும் உரிய தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தித்தரப்படும்.

● சிங்கப்பூர்

சிங்கப்பூரில் தமிழ்க்குடும்பங்களில் வேலை செய்ய பணிப்பெண்கள் தேவை.

தொடர்பு கொள்க அல்லது நேரில் வரவும்:

★ சங்கர் ரவல் சேர்விஸ் ★

இல. 63 (125), சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பில் தொடர்பு கொள்ள முகவரி:

**Garuda Enterprises**
S 47-3rd Floor,
Colombo Central Supper Market,
COLOMBO - 11.
Tel No: 548922.

(சி-3151)



## விக்னு டியூசன் சென்ரர் ★★★★★★★★★★★★

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

SAT & SUN 90, 91 வகுப்புக்கள்

வழமையான நேர அட்டவணையின்படி நடைபெறும்

91 பிரிவு 2

ஆரம்பம்: 06-08-89 (9.00 மணி)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள்

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கலாதரன் |
| கணக்கியல்:- | திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம்:- | திரு. லங்கா |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம்:- | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| புவியியல்:- | திரு. குணராசா |
| அரசியல்:- | திரு. மஃறூவ் |

முக்கிய குறிப்பு: I கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ஒருங்கிணைந்து போதிக்கும் ஒரே நிறுவனம்.
II மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

(C/2945)



## மலிவு விலையில் அறிமுகம்

**Chilton Trip Switch**

மின் பொறியியலில் புகழ் மிக்க Ottermill Chilton Ltd. ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

★ சுந்தர்சன் ★

சந்தை முன், மானிப்பாய்.

**OTTERMILL CHILTON LTD.**
HUNGERFORD, BIRKSHIRE, ENGLAND.

(சி-3120)



உடனடி

★ வேலைவாய்ப்பு ★

சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| கிளீனேர்ஸ் | (Cleaners) | — 400 SR |
| தச்சு வேலை | (Carpenter) | — 600 SR |
| மேசன் | (Mason) | — 600 SR |
| மின் தொழில் | (Electrician) | — 600 SR |
| சாரதி | (Driver) | — 600 SR |
| பெயின்ரேஸ் | (Painters) | — 650 SR |
| டயர் பிற்றர் | (Tyre Fitter) | — 600 SR |
| மெக்கானிக்ஸ் | (Mechanics) | — 600 SR |

வயது 22 முதல் 48 வரை

குவைத்

| | | | வயது |
|---|---|---|---|
| கிளீனேர்ஸ் | (Cleaners) | 30 KD | — 18—45 |
| பெண்கிளீனேர்ஸ் | (Lady Cleaners) | 30 KD | — 30—45 |

மூன்று (3) வாரத்தில் பயணம் செய்யலாம்

★ கனடா ஜேர்மனி ★

★ அவுஸ்திரேலியா

நாட்டிற்குச் செல்வோருக்கு விசா, ரிக்கற் குறுகிய நேரத்தில் செய்து தரப்படும்,

**T. V. TRAVELS**

(Front of Railway Station)
Brown Road,
Kokuvil.

(சி-3155)



## COMPUTER COURSE

இடை நிறுத்தப்பட்ட சகல COMPUTER பிரிவுகளும் 05. 08. 1989 இலிருந்து நடைபெறவுள்ளன.

புதிய பிரிவுகள்: 12-08-1989 இல் ஆரம்பமாகும்.

I. D. P COMPUTER CENTRE
342, K.K.S.ROAD, JAFFNA.

★ மல்லாகம் கிளையில் 05-08-1989 4.30p.m இற்கு சகல மாணவரும் சமூகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

(C/315 0)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கந்தையா மகேஸ்வரி
(வேவி)

மலர்வு: 20. 02. 1931 — உதிர்வு: 17. 07. 1988

திதி: 05-08-1989

ஓராண்டு கழிந்தாலும் உங்கள் முகம்
தினம் தினம் எங்கள் முன் தெரியுது
எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு
நீங்கள் மீளாத்துயில் கொண்டதேனோ?
நாமோ மீளாத்துயரில் நிதம் நிதம்
வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
உற்றார், உறவினர்.

கோப்பாய் தெற்கு.

(11692)



## டக் உறுதிமிக்கது, நீடித்துழைக்கும் திறமை வாய்ந்தது

விற்பனை நிலையங்கள்: 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

டக் - வலிமைமிக்க நம்பத்தகுந்த பாரம் ஏற்றி.
நீண்டதூரம் பொருட்களை ஏற்றிச் செல்ல மிகவும் விரும்பப்படுவது டக். நடைமுறை அறிவடிப்படையான பொறியமைப்பில் கடுகடுப்பாக அமைக்கப்பட்டது.
டக் ஒருபோதும் உங்களை ஏமாற்றம் அடையச் செய்யாது.
எல்லாவற்றிலும் மேலாக டக் மிகவும் குறைந்த எரிபொருளில் இயங்கக் கூடியது அருமையான சொத்து.
புதிய சிறப்புமிக்க டக்கில் அமைந்துள்ள ஒப்பிட நிகரற்ற முடியாத தொழில்நுட்ப இலட்சணங்கள்:-

★ வலுமிக்க ஸ்ரியறிங்.
★ இரு சுற்றுத் தடுப்பு (பிரேக்) முறை.
★ குறைந்த 'கியரில்' இயங்கக்கூடிய 'டிபரென்சியல்'.
★ ஒரு நேரவிசைவலைக் கண் (சிங்குரோமெஸ்) கொண்டகியர் பெட்டி.
★ மேலதிக பாரத்தைப் பொறுக்கக் கூடிய, வலுப்பெறச் செய்யப்பட்ட 'செசிஸ்கள்', திருத்தி அமைக்கப்பட்ட 'சஸ்பென்சனும்'.
★ துருப்பிடியாத தொப்பி மூடி. ★ 'எயர் ஹோண்'.
★ வானொலிப்பெட்டி. ★ 5 மில்லியன் ரூபா பெறுமதிக்கு மேலான உதிரிப்பாகங்கள்.
★ 12 மாதங்களுக்கு/30,000 கி.மீ. ஓடும் வரை உத்தரவாதம்.
★ 3 இலவச செவ்விதத்தல்கள்.

முன்கையிருப்புக்கள் கிடைக்கும்.



இலங்கையில் பிரதான ஏஜென்ஸ் -
பிறீ லங்கா ரேடிங் கொம்பனி லிமிட்டெட்
409, காலி வீதி, கொழும்பு - 3.
தொலைபேசி: 575241 - 4. ரெலெக்ஸ்: 21147 பக்ஸ்: 575441

உதிரிப்பாகப் பகுதி:
168, நீர் கொழும்பு வீதி, பேலியகொடை.
தொலைபேசி: 530595, 530879.

உறுதிமிக்க நம்பத்தகு பாரம் ஏற்றி டக் லொறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தும் புதிய வழி இதோ!

மிசூரி, ஆக 4

புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்த இதோ ஒரு புதிய வழி:

தோமஸ் வாரன், வயது 42. புகை பிடிக்கும் பழக்கத்தை கைவிட பலவாறு முயற்சித்தார்;

அக்குபங்சர் வைத்தியத்தை நாடினார். அது பலனளிக்க வில்லை.

அனுமதேய புகைபிடிப்பவர் சங்கத்தில் சேர்ந்து தியானப் பயிற்சியில் ஈடுபட்டார். அதுவும் கைவிட்டது.

கடைசியாக தனது நண்பர்களின் உதவியை நாடினார்.

கடந்த ஜூலை மாதம் 7 ஆம் திகதி நண்பர்களிடம் இவர் 7.5 மீற்றர் நீள உருக்கு கேபிளைக் கொடுத்து, சோபாக்கட்டிலுடன் தன்னை இறுக்கிக் கட்டிவிடும்படி கூறினார்:

நண்பர்களும் அப்படியே செய்தனர். மூன்று வாரங்கள் கட்டிலுடன் கட்டப்பட்ட நிலையிலேயே அவர் இருந்தார்.

இப்போது அவர் புகைபிடிப்பதே இல்லை.

20 வருடங்களாக ஒரு நாளைக்கு ஒரு பக்கட் சிகரெட் வீதம் பிடித்து வந்தவர் மூன்று வாரங்களில் அதை மறந்து விட்டார் என்று ஏ.எப்.பீ செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது. (எ)


## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## ★ செல்வி நிருபனு ★

வடலியடைப்பைச் சேர்ந்த புவனேந்திரன், உஷா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி செல்வி நிருபனு தனது 2ஆவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, சஞ்சயன் அண்ணு, தீபனு அக்கா, அப்பம்மா, அம்மம்மா, யாழ்ப்பாணம் பெரியம்மா, வாகீசன் அண்ணு, பகி அக்கா, பாரதி அக்கா, ஆரூரன் அண்ணு, மகா அக்கா, விஜி அக்கா, கள்ளியங்காடு பெரியப்பா, பெரியம்மா, ராஜினி அக்கா, ரமேஷ் அண்ணு, ஜெயந்தினி அக்கா, வடலியடைப்பு பெரியப்பா, பெரியம்மா, தர்சனு அக்கா, தாரகா அக்கா, அவுஸ்திரேலியா சாந்தன் அங்கிள், அன்ரி, கார்த்திகா மச்சாள், கார்த்தீபன் மச்சான், வட்டுக்கோட்டை றங்கன் அங்கிள், அன்ரி, செட்டிகுளம் ஆசை அப்பா, சித்தி, சோபனு அக்கா, கோபி அண்ணு, கண்டி சித்தப்பா, சிந்தா அன்ரா, தீபா அக்கா, திலக் அண்ணு, கனடா சித்தப்பா, அஞ்சனு அன்ரா, மயூரிதங்கை, கனடா சண்ணன் அங்கிள், அன்ரி, கௌசி மச்சான், வேலணை பிளேன் சித்தப்பா, சித்தி, சவூதி குஞ்சி அப்பா, சித்தி ஆகியோர் பல் கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

J. BHARATHY,
14A, 3rd Cross Street,
JAFFNA.

[11706]



## டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

Pfizer

®பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# ஆப்கனில் தீவிரமடையும் மோதலை நிறுத்தும்படி ஐ. நா. வேண்டுகோள்

ஐ.நா., ஆக 4

ஆப்கனிஸ்தான் மோதல் இன்னும் நீடிப்பது குறித்து ஐ.நா பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலர் ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறார்.

ஆப்கனிஸ்தானுக்குள் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பிரவேசித்த ஒன்றறை லட்சம் சோவியத் துருப்புக்கள் முற்றாக விலக்கப்பட்டு 6 மாதங்களாகிவிட்டன.

ஆனால் ஆப்கனில் அரசுப் படைகளுக்கும் முஜாஹுதின் கிளர்ச்சியாளருக்கும் இடையேயான மோதல் இன்னும் தீவிரமாகியே வருகின்றது.

இதனால் ஆப்கன் மக்களின் துன்பம் நீடித்துக்கொண்டே போகிறது. ஆப்கன் மக்களுடைய துன்பங்களுக்கு ஓர் அரசியல் தீர்வுகாண சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்.

இப்படி ஐ.நா பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலர் நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் கடந்த வாரம் ஆப்கன் பிரச்சினை குறித்து அமெரிக்க - சோவியத் அதிகாரிகள் நடத்திய உயர் மட்டப்பேச்சுக்கள் தோல்வி அடைந்தது தெரிந்ததே. (எ)

## 40 அடி உயர 'அனுமார்' புதுடில்லி சென்றார்!

புதுடில்லி, ஆக. 4

130 தொன் நிறையுள்ள கருங்கல்லிலான அனுமார் சிலை கடந்த திங்கட்கிழமை புதுடில்லியை அடைந்தது.

40 அடி உயரமும் 13 அடி நீளமும் கொண்ட இச்சிலை 7 அடி பருமனானது.

புதுடில்லி, துக்ளகபாத் ரயில் நிலையத்துக்கு விசேட ரயிலில் இச்சிலை கொண்டு செல்லப்பட்டது. அங்கிருந்து 35 சக்கரங்கள் பொருத்தப்பட்ட வாகனத்தில் பசந்த் கிராமத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

கர்நாடக மாநிலத்தில் கர்க்கல் மலைப்பகுதியில் வைத்து இச்சிலை செதுக்கப்பட்டது.

தென்டில்லி பசந்த் கிராமத்தில் இச்சிலை நிறுவப்பட உள்ளது. (எ)

## சீனவிடம் இருந்து ஏவுகணைகள் வாங்க சிரியா இணக்கம்!

அபுதாபி, ஆக 4

சீனவிடமிருந்து எம் - 9 ரக நடுத்தர ஏவுகணைகளை வாங்க சிரியா உடன்பட்டுள்ளது.

இது சம்பந்தமான உடன்படிக்கை கடந்த மே மாதம் இரு நாடுகளுக்கும் இடையே கைச்சாத்தானது.

இந்த ஏவுகணைகள் 600 கிலோ மீற்றர் தூரம் வரை செல்லக்கூடியது.

சிரியாவில் இருந்து ஏவப்பட்டால் இவை இஸ்ரவேல் பிரதேசத்தைச் சென்று தாக்கக் கூடியன.

சோவியத் யூனியனிடம் இருந்து எஸ் எஸ் - 23 ரக ஏவுகணைகளைப் பெற சிரியா முன்னர் முயற்சித்தது. அது தோல்வி காணவே சீனவுடன் இந்த உடன்படிக்கையைச் செய்தது. (எ)

## ராஜினுமா!

புதுடில்லி லோகசபையில் இருந்து ராஜினமாச் செய்த எதிர்க்கட்சி எம்பிக்களின் எண்ணிக்கை கடந்த செவ்வாய்க் கிழமையுடன் 100 ஐ எட்டியது. [எ]

## ரப்சன் ஜானி பதவி ஏற்பு

ஈரானின் புதிய ஜனதிபதியாக அலி அக்பர் ஹஷாமி ரப்சன் ஜானி நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (ஒ.எ)

## சட்டமா அதிபர் பராசரன்

புதுடில்லி ஆக 4

இந்தியாவின் சட்டமா அதிபராக திரு. கே. பராசரன் மீண்டும் நியமிக்கப்பட்டார்.

1983 முதல் திரு. பராசரன் சட்டமா அதிபராக பணிபுரிந்து வருகின்றார். (எ)

## பிரி- ஆர்ஜென்டீனுவர்த்தகஉறவு ஏழு ஆண்டின் முன்னர் ஆரம்பம்!

பிரிட்டனுடனன வர்த்தகத் தொடர்புகளை ஆர்ஜென்டீனு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

போக்லாந்து யுத்தத்தைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டன் மீது ஆர்ஜென்டீனு அரச வர்த்தகத்தடை விதித்திருந்தது.

அத்தடையை ஆர்ஜெனடீனு ஜனதிபதி திரு மெனிம் நேற்று நீக்கிவிட்டார்.

ஆர்ஜென்டீனு மீது விதித்திருந்த வர்த்தகத் தடையை பிரிட்டன் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே நீக்கிவிட்டது.

இருந்தும் இருநாடுகளுக்கும் இடையே துண்டிக்கப்பட்ட ராஜதந்திர உறவுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

## 'பாரத் பந்த்'தில் அ.தி.மு.க இல்லை செல்வி ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஆக. 4

எதிர்க்கட்சிகள் சேர்ந்து வருகிற 30ஆம் திகதி நடத்தவுள்ள நாடு தழுவிய 'பாரத் பந்த்'தில் அ.தி.மு.க கலந்து கொள்ளாது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா இதனை செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தி.மு.க தேசிய முன்னணியில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அ.தி.மு.க தொடர்ந்து இந்திரா காங்கிரஸை ஆதரிக்கும்.

தி.மு.க போன்று அ.தி.மு.க இரட்டை வேடம் போடமாட்டாது.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் கூண்டோடு ராஜினமாச் செய்ததை அ.தி.மு.க கண்டிக்கிறது.

தேசிய மட்டத்தில் ஸ்திரமான அரசு ஒன்றை அமைக்கும் திறமை ராஜீவ் காந்திக்கே உண்டு.

இப்படி செல்வி ஜெயலலிதா தெரிவித்தார். (எ)

● அரசியல் ரீதியான

## கொலைகள் பற்றி விசாரிக்க போலந்துஎம்.பிக்கள் முடிவு

வார்ஸோ, ஆக 4

அரசியல் கொலைகள்பற்றி விசாரணை செய்ய போலந்து நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது.

1980 இல் இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தபின்னர் 100க்கு மேற்பட்டோர் அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டனர்.

அப்போது உள்துறை அமைச்சராகப் பணியாற்றிய திரு. கிஷோவ் என்பவரே இப்போது பிரதமராக ஜனதிபதி ஜருவலெஸ்கியினல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அப்போது இடம் பெற்ற கொலைகளை விசாரிக்க பிரதமர் தலைமையில் குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்ற பிரேரணை சொலிடாரிட்டி தொழிற்சங்கத்தினல் கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. (எ)

பணயக்கைதி விவகாரம்

## ஈரானுடன் அமெ. தொடர்பு ராஜதந்திர முயற்சி தீவிரம்!

வாஷிங்டன், ஆக. 4

லெபனனில் உள்ள அமெரிக்கப் பணயக்கைதிகளின் விடுதலை தொடர்பாக அமெரிக்க அரசு, ஈரான் அரசுடன் தொடர்பு கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது:

இதனிடையில்— இரண்டாவது அமெரிக்கப் பயணக்கைதியைக் கொல்வதை மேலும் தாமதப்படுத்தியிருப்பதாக முஸ்லிம் தீவிரவாதிகள் அறிவித்தனர்.

பல்வேறு நாடுகளின் ... யீட்டைத் தொடர்ந்து தீவிரவாதிகள் இந்த முடிவை எடுத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை - அண்மையில் இஸ்ரவேலிய அரசினல் கடத்தப்பட்ட 'ஹிஸ் புல்லா' இயக்கத்தலைவர் அப்துல் சரீமுடன் இஸ்ரவேலில் சிறை வைக்கப்பட்டுள்ள ஏனைய அரபுக் கைதிகள் சிலரையும் விடுவிக்க வேண்டும் என்று தீவிரவாதிகள் கோரிக்கை ...

## யானைகளைப் பாதுகாக்க சர்வதேச மாநாடு

வாஷிங்டன், ஆக. 4

தந்தங்களை எடுப்பதற்காக உலகம் முழுவதும் யானைகள் வேட்டையாடுவது அதிகரித்து யானை இனமே அழியக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது அல்லவா!

இதனால் யானைகளைப் பாதுகாப்பதில் உலகநாடுகள் அனைத்தும் தீவிர அக்கறை காட்டி வருகின்றன.

இதன்பயனுக வாஷிங்டனில் சர்வதேச மாநாடு ஒன்று வருகிற அக்டோபரில் நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் 101 நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன.

தந்தங்கள் விற்பனையைப் பல நாடுகள் தற்போது தடை செய்துள்ளன.

இத்தடையை கடுமையாக அமுல் நடத்தும்படி இம் மாநாட்டில் வற்புறுத்தப்படவுள்ளன. (எ)

## விமான விபத்தில் 34 பேர் மரணம்

ஏதென்ஸ் ஆக. 4

கிரீஸில் ஒலிம்பிக் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று ஏஜியன் பிரதேசத்தில் விபத்துக்குள்ளானது விமானத்தில் இருந்த 34 பேரும் அப்போது உயிர் இழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது: (எ)


## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு - 4

**O/L** Day Classes (8.30—1.30)
EveningClasses (3.00—5.00)

புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 7-8-1989

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு: ★

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- | திரு. சூரி |
| கணிதம்:- | திரு. செல்வா |
| தமிழ்:- சமயம்:- | திரு. சுந்தரலிங்கம் |
| ஆங்கிலம்:- | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி:- | திரு. கருணகரன் |
| வர்த்தகம்:- | திரு. சுந்தரமூர்த்தி |

முக்கிய குறிப்பு:

I கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும் ஒரே நிறுவனம்.
II மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(சி 2935)



THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

**A/L 89, 90, 91**
பிரிவுகள்

வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன.

ஆண்டு 4
முதல்
ஆண்டு 11

வரையான வகுப்புக்கள்
யாவும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன.

**O/L**
**Day Class**
புதிய பிரிவு
ஆரம்பம்:
07-08-1989

(1443)



## பனை அபிவிருத்திச் சபை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மகளிர் பயிற்சி நெறிக்கு பயிலுநர்களைத் தெரிதல்

மகளிர் குழுக்களுக்கு மேற்பார்வையாளர்களையும், அமைப்பாளர்களையும் தெரிவு செய்து பயிற்சி அளிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: 1. மகளிர்குழு மேற்பார்வையாளர்பதவி:
ஜீ. சீ. ஈ. உயர்தரம் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அதில் ஒன்று பொருளியல், வர்த்தகம் அல்லது இரசாயனமாக இருத்தல் வேண்டும்.

2. மகளிர் குழு அமைப்பாளர்:
க.பொ.த. சாதாரணம் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒன்று எண்கணிதம் அல்லது தூயகணிதமாக இருத்தல்வேண்டும்.

வயது எல்லை:- 18 க்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பிறதகைமைகள்:- பாடசாலைக் கல்வியின் பின் மகளிர் குழுக்கள், பொது நிறுவனங்கள், சமூக சேவை ஸ்தாபனங்கள், பனை சார் உற்பத்திக் குழுக்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களில் அங்கம் வகிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி தெரிவு செய்யப்படும் பயிற்சியாளர்களுக்கு இலங்கையிலும் இந்தியாவிலும் குறுகியகாலப் பயிற்சி ஒரு குறிப்பிட்ட அளவு வேதனத்துடன் வழங்கப்படும். பயிற்சி முடிந்தபின்பு பயிற்சியாளர்கள் குறிப்பிட்ட இடங்களில் மகளிர் குழுக்களை அமைத்து செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்படி பணிக்கப்படுவார்கள்.

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தலைவர், பனை அபிவிருத்திச்சபை, இல. 47, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.08.89க்கு முன்பாகக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவேண்டும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம். 1989.08.04

(C/3171)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த செல்வம்''

...பத்திக்கு ஆதரவு தாருங்கள்.

மாணவ மணிகளே, 25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி அப்பியாசக் கொப்பி ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

# உதயன்

05 08 - 1989 சனிக்கிழமை

''நல்லூரில் சகாய விற்பனை''

நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் அமைந்திருக்கும் ''மில்க்வைற்'' விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூபா 20/-க்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு காத்திருக்கும் அன்பளிப்புகள்:-

1. கந்தர் அநுபூதி புத்தகம்.
2. சுவாமி சிவானந்தர் போதனைகள்.
3. அழகிய பொலித்தீன் பை.
4. அகத்திக் கன்று ஒன்று.
5. கீரை விதைப் பைக்கற்.

'மில்க்வைற்' மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் கொடுத்து மேற்படி பரிசில்களை பெற்றுக் கொள்ளவும்.

### யாழ் ஆஸ்பத்திரி வீதி

## இலங்கை வங்கிக் கிளையில் திங்களன்று நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக. 5

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் பிரதான கிளையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மீளக் குடியமர்தல் நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளது.

முன்னர் பெயரும், திகதியும் குறிப்பிடப்பட்டு, அத்திகதிகளில் நிவாரணப் பணம் பெறத் தவறியவர்களுக்கே திங்களன்று பணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளும், குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ யாழ் நகரம் - 72.
- ★ பெரிய கடை - 40.
- ★ நாவாந்துறை - 38.
- ★ நல்லூர் தெற்கு - 123.
- ★ பத்தைமேனி - 28.
- ★ இடைக்காடு - 41.
- ★ அச்சுவேலி வடக்கு - 80.
- ★ அச்சுவேலி தெற்கு - 49.
- ★ புத்தூர் கிழக்கு - 13.
- ★ வாதரவத்தை . 05.
- ★ புத்தூர் மேற்கு - 57.
- ★ ஆவரங்கால் - 35.
- ★ சிறுப்பிட்டி - 110.
- ★ அச்செழு - 33.
- ★ நீர்வேலி 291.
- ★ ஊரெழு - 50.
- ★ உரும்பிராய் கிழக்கு - 33.
- ★ உரும்பிராய் மேற்கு - 62
- ★ கோப்பாய் வடக்கு - 95.
- ★ கோப்பாய் தெற்கு - 25.
- ★ இருபாலை - 104.

இத்திகதிகளில் நிவாரணப் பணம் பெறத் தவறுபவர்களின் பட்டியல் யாழ். செயலகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

### ராஜீவ்- ஜே ஆர்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

ஜூலை 1987 ஒப்பந்தத்துடன், அந்த உறுதிமொழிகளையும் சேர்த்துப் பரிசீலனை செய்யவேண்டும் என்று இந்தியா கருத்துத் தெரிவித்ததாம்.

ஆனால் தற்போது புதுடில்லியில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது ''1987 நவம்பர் இரகசிய உடன்பாடு'' பற்றி இலங்கைக் குழு கவனம் செலுத்தவே இல்லை என்று கூறப்படுகின்றது.

அந்த ''இரகசிய உடன்பாட்டை'' ஒரு ''அழிந்த கடிதமாக'' (Dead Letter) ஆக இலங்கை கணித்ததாகத் தெரிகிறது. (ஓ-எ)

உ
சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பு

**அமரர் நடிகமணி V. V. வைரமுத்து**

நடிகமணி திரு. வி. வி. வைரமுத்து அவர்களின் (நாடகக் கலைஞர்) அந்தியேஷ்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (7-8-89) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும்.
உறவினர்களையும், நண்பர்களையும், அபிமானிகளையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி இ. வைரமுத்துவும்
பிள்ளைகளும்-

''வசந்தகான சபா''
காங்கேசன் துறை.

(11696)

## OSSLO

கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 90, 91**

**ஆரம்பம் 06- 08- 89**

(ஞாயிறு) காலை 9 00 மணி

| | |
|---|---|
| பொருளியல்:- | லோகசிங்கம் |
| வர்த்தகம்:- | கனகரட்ணம் |
| கணக்கியல்:- | பவான் |
| அளவையியல்:- | யுகபாலசிங்கம் |
| தமிழ்:- | வைகுந்தன் |
| இந்துநாகரிகம்:- | முருகையன் |
| அரசியல் | மஃறூவ் |

ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை சகலவகுப்புகளும் நடைபெறுகின்றன.

(11691)

## பெண் ஊழியர் தேவை

எமது தொழிற்சாலையில் பலதரப்பட்ட பகுதிகளில் வேலை செய்வதற்கு பெண் ஊழியர் தேவைப்படுகின்றனர். யாழ்ப்பாணம், நுணாவில் கோயிலாக்கண்டி போன்ற இடங்களிலிருந்து வேலைக்கு வருவோருக்கு வந்து போக வாகன வசதி செய்து தரப்படும். தூர இடங்களில் இருந்து வருவோருக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும். நேர்முகப்பரீட்சை இம்மாதம் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை எமது பணிமனையில் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

முகாமையாளர்,
அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டெட்,
நாவற்குழி.

[11681]

### பதிவு செய்து பேசும் முறையிலான

# 100 தொலைபேசி இணைப்புகள் மூன்று வாரத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம், ஆக 5

யாழ்ப்பாணத்துக்கு நூறு தொலைபேசி இணைப்புகளைக் கொண்ட பரிவத்தனை நிலையம் (''எக்ஸ்சேஞ்'') இன்னும் மூன்று வாரங்களில் இயங்க இருக்கிறது.

தொலைத் தொடர்பு திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்சமயம் யாழ் மாவட்டத்தில் 24 தொலைபேசி இணைப்புக்களே செயற்பட்டு வருகிறது.

சுமார் 4 கோடி ரூபா செலவில் கொண்டுவரப்படவிருக்கும் நூறு இணைப்புக்கள் கொண்ட இயந்திர மூலம் 90 வாடிக்கையாளருக்கு தொலைபேசி வசதி வழங்கப்படும்

தற்சமயம் கொழும்பு வந்தடைந்துள்ள இந்த இயந்திரத்தை பரீட்சித்துப் பார்க்க உயர் மட்ட பொறியியலாளர் குழு ஒன்று கொழும்பு செல்ல இருக்கிறது.

கொழும்பில் இருந்து பிரஸ்தாப இயந்திரம் இங்கு கொண்டுவரப்பட்டு பண்ணையில் உள்ள தொலைத்தொடர்பு பரிவத்தனை நிலையத்தில் பொருத்தப்படும்.

மூன்று வாரத்தில் புதிய இயந்திரம் இயங்க ஆரம்பிக்கும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

புதிய தொலைபேசி வசதி பெறுபவர்கள் வெளிமாவட்டங்களுக்குத் தொடர்பு கொள்வதற்குபரிவத்தனை நிலையத்தில் தாம் பேசவிரும்பும் இலக்கத்தைப் பதிவு செய்து சில நிமிட நேரம்காத்திருந்தே பெறவேண்டும். யாழ்ப்பாண நகரத்திற்குள் நேரடியாகச் சுழற்சியில் பேசலாம்— என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

புதிய தொலைபேசி சேவை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகத் தொலைத்தொடர்பு திணைக்கள ஊழியர்கள் தற்சமயம் நிலத்தின் கீழ் உள்ள கேபிள்களை பரிசீலனை செய்து வருகிறார்கள்.

நூறுஇணைப்புக்கள்கொண்ட பரிவத்தனை இயந்திரம் ஒன்று திருமலையிலும் பொருத்தப்படவிருப்பகதாக அந்த அதிகாரி மேலும் தகவல் தந்தார்.

யாழ்ப்பாணத்துக்குரிய தொலைபேசி இணைப்பு அநுராதபுரத்துக்குக் கீழும் திருமலைக்குரிய இணைப்பு கொழும்புக்குக் கீழும் இயங்கும் எனத் தெரியவந்தது. (அ-3)

### இந்தியப்படை.,.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை தணிவிக்க நடக்கும் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில் கூட எம் மக்கள் படும் துயரம் மேன்மேலும் அதிகரித்துச் செல்கின்றது.

எம்மைப் பொறுத்த வரையில் இந்தியப் படைகள் — தமிழீழ விடுதலைப் புலிகள் மோதல் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே நிபந்தனையற்ற நிரந்தரப் போர் நிறுத்தம் அவசியம் என்பதை வலியுறுத்தி வந்துள்ளோம்

கடந்த பொதுத் தேர்தலிலும் தமிழ் பேசும் மக்கள் இந்நிலைப்பாட்டுக்கு பூரண அங்கீகாரம் அளித்திருந்தனர். தமிழ் பேசும் மக்களின் இக்கோரிக்கை நாடாளுமன்றத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே பேச்சுவார்த்தை நடக்கும் இக்காலகட்டத்தில் உடனடியாகத் தமிழ் பேசும் மக்கள் படும் துயரத்தைக் களைவதற்கு பின்வரும் தீர்வினை முன்வைக்கிறோம்.

வடகிழக்கின் நிரந்தர அமைதிக்கு ஏதுவாக இந்தியப் படையினர் கட்டம் கட்டமாக வெளியேறுவதற்கு கால அட்டவணை தயாரிப்பதற்கு முதற் படியாக யுத்த நிறுத்தம் ஒன்றினை அறிவித்து இந்தியப் படையினர் கேந்திர மையங்களில் நிலைகொள்ள வேண்டும்.

இதன் மூலமே ஆயுதக் களைவு என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டுள்ள யுத்த சூழ்நிலை களையப்பட முடியும். யுத்தச் சூழ்நிலை களையப்பட்டால் மட்டுமே நேர்மையான அரசியல் தீர்வினை அடைவது பற்றி எவரும் ஆழ்ந்து சிந்தித்து செயற்பட முடியும். இக்கோரிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆதரவாகச் செயற்படுவார்கள் என பூரணமாக நம்புகின்றோம்.

இலங்கை, இந்திய அரசுகள் இவ்விடயத்தில் ஒரு முனைப்பட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். விடுதலை இயக்கங்களின் நேரடிப் பங்குபற்றல் இல்லாமல் செய்யப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் இயக்கங்களின் மோதலுக்கே வழிவகுத்தன. எனவே இயக்க ஒற்றுமைக்கு வழிவகுக்கும் முறையில் இந்த ஒப்பந்தம் இதற்கு ஏற்ற வகையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். (ஓ-10)

## இந்தியாவின் பங்கு பற்றி திருமலையில் தீர்மானம்

### தமிழர் தேசிய சபை நிறைவேற்றியது

கொழும்பு, ஆக, 5

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடத்தப்படும் பேச்சுக்கள் அனைத்திலும் இந்தியா பங்கேற்றுக்கொள்வது மிகஅவசியம்.

இப்படித் தமிழர் தேசிய சபை தீர்மானித்துள்ளது.

இந்த அமைப்பில் ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். எல். எவ். ரெலோ ஆகிய தமிழர் அமைப்புக்கள் அங்கம் வகிக்கின்றன.

சபையின் கூட்டம் நேற்று திருமலையில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் முன்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் இந்தியாவைத் தவிர்க்க முயற்சிப்பது இந்த முத்தரப்புப் பேச்சுக்களின் அடித்தளத்தையே பாதிக்கும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (ஓ-எ-க)

## களவு போன நகையை மீட்க படையினர் செய்த உதவி

யாழ்ப்பாணம், ஆக. 5

பெண் பயணி ஒருவரிடமிருந்து அபகரிக்கப்பட்ட தங்க வளையலை அமைதிப்படையினர் மீட்டுக் கொடுத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நல்லூர் கோயிலுக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் இடம் பெற்றது.

இது குறித்து அரியாலை படைமுகாம் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

நிறுத்தப்பட்டிருந்த மினி பஸ்ஸில் பெண் பயணி ஒருவர் கையை ஜன்னலில் வைத்தவாறு அமர்ந்திருந்தாராம்.

இதை அவதானித்த பெண் ஒருவர் தங்க வளையலை உருவி எடுத்துக் கொண்டு அவ்வழியே வந்த இன்னும் ஒரு பஸ்ஸில் ஏறிவிட்டாராம்.

தங்கவளையலைப் பறிகொடுத்த பெண் கூக்குரல் இட்டார். அவ்வேளையில் எதிர்பாராத விதமாக வாகனம் ஒன்றில் வந்த அமைதிப்படையினர் விஷயத்தை கேட்டு அறிந்து கொண்டனர்.

உடனடியாக தங்கவளையலை உருவி எடுத்துக் கொண்ட பெண் பயணம்செய்த பஸ்ஸை படையினர் கலைத்துச் சென்றனர்.

குறிப்பிட்ட தூரத்தில் பஸ் மறிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பெண்ணிடம் இருந்த தங்க வளையலை படையினர் மீட்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்தனராம்.

### தமிழர் பாது.,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானிக்கக் கூடும்.

—இப்படி அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

இதேவேளை வாராந்தம் ஆயிரத்து 500 துருப்புக்கள் வீதம் விலக்கிக் கொள்ளும் திட்டத்தின்கீழ் அமைதிப்படை முழுமையாக வாபஸாவதற்கு ஏழு மாதங்கள் செல்லும். இதனால் இந்தத் திட்டத்தை ஜனாதிபதி பிரேமதாசா ஏற்கமாட்டார் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (உ-ஓ.எ)

### ஜே. வி. பி..,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் 4 பேர் காயமடைந்தனர்.

★ கண்டியிலும் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள், அரசு அலுவலகங்கள் பூட்டப்பட்டிருந்தன. பஸ்களே ஓடவில்லை.

★ காலியிலும் இதேநிலைதான் காணப்பட்டது.

★ பூட்டப்பட்ட கடைகளைப் பாதுகாப்பு படையினர் பலவந்தமாக பல இடங்களில் உடைத்தனர். அக்கடைகளில் இருந்த பொருள்களை இனந்தெரியாதோர் அகற்றிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

★ இரத்தினபுரியில் பாதுகாப்புப் படையினர் ரோந்து சென்று கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர். அதில் ஓர் இராணுவ அதிகாரியும், சார்ஜன்ட் ஒருவரும் உயிரிழந்தனர். (உ-எ)

### இளைஞர் காயம்

கோண்டாவில் பகுதியில் நேற்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த இளைஞர் ஒருவரை அமைதிப்படையினர் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

காயமடைந்தவர் ராஜலிங்கம் ஜெகதீஸ்வரன் வயது(22) என்பவர் ஆவார். (ஓ-9)

### ரஞ்சன் தூதுக்...

களின்போது பல தப்பான அபிப்பிராயங்கள் நீக்கப்பட்டதாக இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்களின்போது இரு தரப்பினரும் தமது யோசனைகளை முன் வைத்தனர் என்றும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## சுழற்சி முறை மின்சாரம் மீண்டும் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஆக 5

சுழற்சி முறை மின்சாரம் வினியோகம் இன்று அல்லது நாளை மீண்டும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில்இயங்கிவந்தஜெனரேற்றர்களில் இரண்டு பழுதடைந்ததை அடுத்து ஒரு மணித்தியால நேரம் வரை வழங்கப்பட்ட சுழற்சி முறை மின் விநியோகம் கடந்த இரண்டு நாட்களாக நிறுத்தப்பட்டது.

தற்போது நான்கு ஜெனரேற்றர்கள் மட்டுமே இயங்கி வருவதாகவும் இவைஉற்பத்தி செய்யும் மின்சாரம் ஆஸ்பத்திரி போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது என்று அதிகாரி ஒருவர் சொன்னார்.

பழுதடைந்த இரண்டு ஜெனரேற்றர்களும் திருத்தப்பட்டதும் சுழற்சி முறை விநியோகம் இன்று அல்லது நாளை ஆரம்பமாகும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. (அ-9-10)

### மீளக்குடியமர்தல் ரூபா 1,000

## சுன்னுகம் மக்கள் வங்கியில் 8ஆம்திகதி முதல்நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

இடம்பெயர்ந்தவர்களுக்கான மீளக்குடியமர்வு நிவாரணக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்படும்.

ஏற்கனவே பெயர், திகதி குறிப்பிடப்பட்டு அத்திகதிகளில் பணத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களுக்கே முதலில் நிவாரணப் பணம் வழங்கப்படும் என வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

8ஆம் திகதி நிவாரணம் பெறவுள்ள கிராமசேவைபிரிவுகளும், குடும்பங்களும் எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ ஏழாலை தெற்கு—89
- ★ ஏழாலை வடக்கு—53
- ★ ஏழாலை மேற்கு—37
- ★ கோப்பாய் — 08

9 ஆம் திகதி:-

- ★ இணுவில் — 105
- ★ உடுவில் தெற்கு — 56
- ★ உடுவில் வடக்கு — 116

10 ஆம் திகதி:-

- ★ சுன்னாகம் — 218

15 ஆம் திகதி:-

- ★ குப்பிளான் — 338

இத்தினங்களில் பெறத் தவறுபவர்களின் நிவாரணப் பணம் யாழ் செயலகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுவிடும் என்று வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ)

### வானம் எங்கணும்.,...

கவும் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊரடங்கின் மத்தியிலும் தமது உயிரையும் துச்சமென மதித்துச் சிலர் வல்வைப் பகுதியிலிருந்து கால்நடையாக வெளியே வருகின்றனர்.

பாதுகாப்புக் கருதி வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்த பொதுமக்களில் சிலரும் இவ்வாறு வெளியே வந்துள்ளனர்.

இதேவேளை தமக்கு நேர்ந்த பாதிப்புகளைத் தெரிவிப்பதற்கு, வல்வைப் பிரசைகள் குழுப் பிரமுகர்கள் எவருடனும் தொடர்புகொள்ள முடியாத நிலையில் பொதுமக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

#### பிரசைகள் குழு பிரமுகர்கள்

கடந்த புதன்கிழமை அசம்பாவிதங்கள் ஆரம்பமாகிய பின்னரும் அன்று வல்வெட்டித்துறையில் காணப்பட்ட பிரசைகள் குழுப் பிரமுகர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன ஆயிற்று என்பது குறித்து எதுவும் தெரியவில்லை என்ற அச்சநிலை உருவாகி உள்ளது.

இதேவேளை — வடமராட்சிப் பகுதியில் நேற்றும் ஊரடங்கு நீடிக்கப்பட்டது.

ஊரடங்கு வேளையிலும் பல இடங்களில் மோதல்கள்இடம் பெற்றதாகவும், மோதல்களை அடுத்து துப்பாக்கிப் பிரயோகங்களும் ஷெல் வீச்சுகளும் இடம்பெற்றதாகவும் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கடந்த மூன்று நாள் அசம்பாவிதங்களின் போதும், பொதுமக்களில் பலர் இறந்திருக்கலாம் என அஞ்சப்பட்டது. ஆனால் ஊரடங்கு காரணமாக ஊர்ஜிதமான தகவல்கள் இல்லை.

நேற்று நடந்த ஒரு மோதல் சம்பவத்தின் போது இடம்பெற்ற ஷெல் வீச்சில் காயமடைந்தவர்களில் ஒருவர் யாழ்ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வரப்பட்டார். குழந்தைவேலு பாலகுமாரன் என்ற 48 வயதுடையவரே அவராவார்.

நேற்று முன்தினம் நெல்லியடி - இரும்பு மதவடிப் பகுதியிலும் வதிரிப் பகுதியிலும் மோதல்கள் இடம்பெற்றன என்றும் அறிய வந்தது.

## மரண அறிவித்தல்

### திருமதி ருக்குமணி செல்லத்துரை

சண்டுக்குளியைச் சேர்ந்த ருக்குமணி செல்லத்துரை 4-8-89 இல் காலமானார். இவர் காலஞ் சென்ற A. செல்லத்துரையின் அன்பு மனைவியும் விஜயரெட்ணம், கனகரெட்ணம் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்னாள் உதவி முகாமையாளர்) துரைரெட்ணம் (கனடா), சத்தியநாதன் (பாலா) (கனடா), பஞ்சலிங்கம் (ஜேர்மனி), சந்திரக்குமார் (இத்தாலி), சூரியக்குமார், செல்வக்குமாரி (சித்திரா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற ரெட்ணசிங்கம், ராஜரெட்ணம் (ஓய்வு பெற்ற சிமெந்துக் கூட்டுத்தாபன சுப்பிறின்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் புஸ்பராணி, நேசமலர் (முன்னாள் ஆசிரியை செண். ஜேம்ஸ் பெண்கள் வித்தியாலயம்) றெஜீனா, இந்திராணி (கனடா), சாந்தி (ஜேர்மனி), கோமதி, பாலஜோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். சுற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

ஈமக்கிரியைகள் (6-8-89) ஞாயிறுகாலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் இருந்து துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. சூரியகுமார்
(மகன்)

17, பிளேச்சர் வீதி,
சுண்டிக்குளி.

(11695)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05 - 08 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org